6th February 1959]

Sri A. VEDARATHNAM : சர்க்காரால் இப்போது நடத்தப்பட்டு வருகிற ஹாஸ்டல்களில் எல்லாம் அவர்கள் நிர்ணயித்திருக்கின்ற இந்தத் தொகைக்குள் அந்த மாணவர்களுக்கு இப்போது இருக்கிற விலையில் சாப்பாடு போட முடிகிறதா ? இல்லையானல் அதைப் புனராலோசனை செய்ய அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri P. KAKKAN : சர்க்காரால் நடத்தப்பட்டு வரும் ஹாஸ்டல்களில் மொத்தம் எவ்வளவு செலவாகிறதோ அது சர்க்காராலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. தனியார் ஹாஸ்டல்களுக்கு ஒரு மாணவனுக்கு 15 ரூபாய் என்றுதான் கொடுக்கப்பட்டு வருகிறது. அதிகம் செலவாகிற போது அவர்கள் நன்கொடையாகத் தான் வாங்கி நடத்த வேண்டியிருக்கிறது.

Sri P. G. MANICKAM : ஒரு மாணவனுக்கு 8 அணு வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அந்த எட்டணு போதாமல் இருப்பதனுல் அதிகத் தொகை கொடுக்க சர்க்கார் பரிசிலனை செய்யுமா ?

The Hon. Sri P. KAKKAN : தனிப்பட்டவர்கள் ஹாஸ்டல் நடத்தினுல் சர்க்காரின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நல்லமுறையில் நடத்த வேண்டும். அப்போதுதான் கிராண்டு வரும் என்று சொல்ல விரும்புகிறேன்.

Sri A. VEDARATHNAM : இப்போது உணவுப் பொருள்களை அரசாங்கமே கொள்முதல் செய்ய உத்தேசித்து இருப்பதனுல் ஹாஸ்டல்களுக்கு நிர்ணயித்திருக்கிற விலைக்கு தானியத்தை விநியோகம் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri P. KAKKAN : அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

* 56 *Q*.—**Sri K. SATTANATHA KARAYALAR** (on behalf of Sri T. Veluchami) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

நெல்லை ஜில்லாவில் ஹரிஜன இலாகாவின் கீழ் நடத்தப்பட்டு வரும் ஹாஸ்டல்களின் "மேல் பார்வை கமிட்டிகளில்" அந்த ஹாஸ்டல்கள் இருக்கும் தாலூகாக்களைச் சேர்ந்த சட்ட சபை உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்ள சர்க்காருக்கு உத்தேச முண்டா?

The Hon. Sri P. KAKKAN : The Government have ordered that the Advisory Committee for each Government Harijan hostel should consist, among others, of three non-officials, two of them being Harijans. The Collectors in the mufassal and the Director of Harijan Welfare in the Madras City are empowered to nominate the members of the Advisory Committees. The Collectors of Tirunelveli has at his discretion appointed the local M.L.As. and M.Ps. as members of the Advisory Committees for the various Government hostels in the district.

Sri V. K. KOTHANDARAMAN : சர்க்கார் இது போன்ற ஹாஸ்டல்களுக்கு மேல்பார்வை கமிட்டிகள் அமைக்கும்போது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களையேதான் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிருர்களா? ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களையேதான் போட்டு வருகிருர்கள் ஒரு வேளை எதிர்கட்சி அங்கத்தினர்களைப் போட்டால் அதில் உள்ள ஊழல் வெளிப்பட்டுவிடும் என்பதற்காக . . . . .

DEPUTY SPEAKER : The hon. Member must put the question and not argue.

[16th February 1959

SRI V. K. KOTHANDARAMAN : இதில் இருக்கக்கூடிய ஊழல் தெரிந்துவிடும் என்று போடுவதில்லையா என்று கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கமிட்டி அங்கத்தினர்களை நியமிப்பது கலெக்டர் கையில் விட்டிருக்கிறோம். சென்னை நகரத்தைப் பொறுத்த மட்டில் டைரெக்டர் கையில் இருக்கிறது. இவர்கள் பார்த்து யாரைப் போட்டால் இந்த ஹாஸ்டல் நிர்வாகம் நன்றாக நடக்கும் என்று நினைக்கிறார்களோ அவர்களைப் போடுகிறார்கள்.

SRI A. GOVINDASAMY : ஹாஸ்டல்களை நடத்துகிற கமிட்டிகளை எல்லா இடங்களிலும் நியமித்திருக்கிறார்களா?

THE HON. SRI P. KAKKAN : எல்லா இடங்களிலும் நியமிக்கப்படுகிறது. கலெக்டர் இவர்களை நியமித்து வருகிறார்கள்.

Matching Grant

* 57 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the panchayats in Kanyakumari and Shencottah taluks are entitled to 'Matching Grant'; and

(*b*) if so, to what extent?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) & (*b*) Yes, Sir. Every panchayat in the transferred area is entitled to get Government contribution equal to the amount collected by the panchayat during a particular year by levying rates, taxes and other fees, subject to a maximum of Rs. 2,000.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தச் சிறு நிகர மானியம் இதுவரை எத்தனை பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? கன்னியாகுமரி மாவட்டத்திலும், செங்கோட்டை மாவட்டத்திலும் இன்னும் கொடுக்கப்படவேண்டிய மாச்சிங் கிராண்டு எவ்வளவு?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதுவரையிலும் மொத்தமாக இரண்டு லட்சத்து நாற்பத்தாராயிரம் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் தனியாக எவ்வளவு எவ்வளவு கொடுகப்பட்டிருக்கிறது என்ற விபரத்திற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI K. SATTANATHA KARAYALAR : இன்னும் கொடுக்க வேண்டிய தொகை எவ்வளவு இருக்கிறதென்று சொல்ல முடியுமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : தகராறு இல்லாத இடங்களுக்குக் கொடுக்கப்பட்டது. தகராறு ஏதாவது இருந்து வரும் இடங்களில் கொடுக்கப்படாமல் இருக்கலாம்.

Congress Exhibition, 1957–58.

* 58 Q.—SRI M. JAGANNATHAN and SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of stalls taken by the various departments of the Government of Madras, in the Congress Exhibition in 1957–58;

(*b*) the total expenditure incurred on this account; and

(*c*) the amount spent by each department?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*), (*b*) & (*c*) A statement is placed on the table of the House.

---

* Printed as Appendix I on page 232 infra.